**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் அவர்களின்**

**செயல்முறை ஆணை, சென்னை – 18.**

**முன்னிலை : திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,**

**ஆணையர்.**

ந.க.875/2022/கூதே1(1) நாள் : 11.01.2023

**பொருள் :** கூட்டுறவுச் சங்க தேர்தல் 2023 – நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் தலைவர்/துணைத்தலைவர் தேர்தல்கள் - பாலுற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை - மாவட்ட தேர்தல் அலுவலர்கள் நியமனம் வழங்கியது - புதிதாக பிரிக்கப்பட்ட மாவட்டங்களுக்கான மாவட்ட தேர்தல் அலுவலர் நியமனம் - தொடர்பாக.

**பார்வை :**

1. தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்தின் செயல்முறை ஆணை ந.க.875/2022/கூதே1, நாள் 12.09.2022.
2. தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்தின் கடிதம் ந.க. 1437/2022/கூதே.3 நாள் 20.12.2022

*****

**ஆணை:**

பார்வை 1-ல் காணும் ஆணையத்தின் செயல்முறை ஆணைப்படி, ஆணையர் பாலுற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறையின் மாவட்ட அளவிலான நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்திட மாவட்ட தேர்தல் அலுவலர்களை ஆணையம் நியமனம் செய்தது.

இந்நிலையில் கூட்டுறவுத் தேர்தல் 2023 தொடர்பாக 05.01.2023 அன்று பிற்பகல் 3.00 மணியளவில் ஆணையர், பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை / மாநில தேர்தல் அலுவலருக்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்து கொண்ட ஆணையர், பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறையால் புதிதாக பிரிக்கப்பட்ட செங்கல்பட்டு, இராணிபேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, தென்காசி மற்றும் மயிலாடுதுறை ஆகிய 6 புதிய மாவட்டங்களுக்கான மாவட்டத் தேர்தல் அலுவலர் நியமனம் குறித்து கருத்து தெரிவிக்கப்பட்டது. அதில் 6 புதிய மாவட்டங்களுக்கு என தனியாக துணைப்பதிவாளர்கள் (பால்வளம்) இதுவரை நியமிக்கப்படாத நிலை இருப்பதாகவும், இப்புதிய மாவட்டங்களுக்கு உரிய மாவட்ட தேர்தல் அலுவலர்களாக ஏற்கனவே உள்ள மாவட்ட தேர்தல் அலுவலர்கள் செயல்படலாம் என்றும் கருத்து தெரிவித்து அதற்கு தனியே மாவட்ட தேர்தல் அலுவலர் நியமனம் வழங்குமாறும் ஆணையர், பாலுற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறையினரால் கோரப்பட்டது.

மேற்படி ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட இக்கோரிக்கையினை ஆணையம் கவனமுடன் பரிசீலித்து அதனை ஏற்று இணைப்பில் கண்டுள்ள அலுவலர்களை அவர்கள் நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட 6 புதிய மாவட்டங்களுக்கான மாவட்ட தேர்தல் அலுவலர்களாக 1988-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள் **விதி எண்.52-A-(4)-ல் கீழ்** தனக்களிக்கப்பட்ட அதிகாரத்தினை கைக்கொண்டு நியமனம் செய்து ஆணையம் ஆணையிடுகிறது.

இவ்வாறு நியமிக்கப்பட்ட மாவட்ட தேர்தல் அலுவலர்கள் நியமனம், அவை தொடர்பாக **மாற்று ஆணை ஏதும் பிறப்பிக்கப்படாத வரை, புதிய நியமன ஆணைகள் ஏதும் தேவைப்படாத**, பாலுற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் வரும் (Administrative Control) சங்கங்களின் ஒட்டுமொத்த தேர்தல் (Enmasse Elections) மற்றும் அவை தவிர்த்த இதர வகையிலான தேர்தல்கள் (Other than Enmasse Elections) மற்றும் காலியிடங்களுக்கான தேர்தல்கள் அனைத்திற்கும் பொருந்துவதாகும் என்றும் **அவர்கள் மாவட்ட தேர்தல் அலுவலர்களாக தொடர்ச்சியாக இருந்து வருவார்கள் (Shall continue as DEO's) என்றும் ஆணையம் அறிவிக்கிறது.**

இவ்வாறு விதி எண்.52-A(4)-ன் கீழ் ஆணையத்தால் நியமிக்கப்படும் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் அவ்விதியில் கட்டளையிட்டுள்ளபடி (Mandate) தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வை, கட்டளைகள் மற்றும் கட்டுப்பாட்டிற்குட்பட்டு, அவர்கள் சம்மந்தப்பட்ட நிர்வாக கட்டுப்பாட்டின்கீழ் உள்ள சங்கங்களை பொறுத்து, வாக்காளர் பட்டியல் தயாரித்தல், வெளியிடுதல் மற்றும் அச்சங்கங்களுக்கான நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் அலுவல் நிர்வாகிகளுக்கான (Members of the Board and Office Bearers) தேர்தல் நடத்த ஒத்துழைத்து மற்றும் மேற்பார்வை செய்தல் வேண்டும் என்பதுடன், ஆணையத்தால் அவ்வப்போது அவர்களுக்கு ஒப்படைக்கப்படும் செயல்பாடுகளை செயற்படுத்துதல் வேண்டும் என்றும் ஆணையம் அறிவிக்கிறது

**ஒம்/-**
**ஆணையர்**

11/1/23
**ஆணையருக்காக**

**இணைப்பு** : மேற்கண்டவாறு

**பெறுநர்**

மாவட்ட தேர்தல் அலுவலர்கள்
(ஆணையர், பாலுற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை/ மாநில தேர்தல் அலுவலர் மூலமாக).

**நகல்**

1. தலைமைச் செயலாளர், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-9
2. அரசு முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, சென்னை-9.
3. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம், மீனவர் நலத்துறை, சென்னை-9.
4. அலுவலக இருப்புக் கோப்பு.
5. கணினி ஆளுமையாளர்.

## இணைப்பு

## ந.க.எண் 875/2022/கூதே1(1)

| வ.எண் | துறை | புதிதாக பிரிக்கப்பட்ட மாவட்டம் | நியமனம் செய்யப்படும் மாவட்ட தேர்தல் அலுவலர் பதவியின் பெயர் (Designation) |
|---|---|---|---|
| 1 | பால்உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை | செங்கல்பட்டு | துணைப்பதிவாளர் (பால்வளம்). காஞ்சிபுரம் |
| 2 | பால்உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை | திருப்பத்தூர் | துணைப்பதிவாளர் (பால்வளம்). வேலூர் |
| 3 | பால்உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை | இராணிப்பேட்டை | |
| 4 | பால்உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை | கள்ளக்குறிச்சி | துணைப்பதிவாளர் (பால்வளம்). விழுப்புரம் |
| 5 | பால்உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை | தென்காசி | துணைப்பதிவாளர் (பால்வளம்). திருநெல்வேலி |
| 6 | பால்உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை | மயிலாடுதுறை | துணைப்பதிவாளர் (பால்வளம்). நாகப்பட்டினம் |

ஒம்/-

ஆணையர்

11/1/23

ஆணையருக்காக

11/1/23